**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 73/2017**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 14.10.2025 | | |
| பெயர்: | செல்வ ஐயனார் (PW– 2 Cross ) | தகப்பனார் பெயர்: | ஆறுமுகசாமி |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 53/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :14.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.22)**

1. நான் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறு என்றாலும் அதையொட்டி நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல. தாவா B அட்டவணை உரிய சட்டப்பிரிவின் கீழ் மதிப்பிடப்படவில்லை என்றாலும் அதையொட்டி உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. அம்பலவாணன் மகன் ராஜமாணிக்கம் கிரய ஆவண எண்–1069/1938 என்ற ஆவணத்தில் கோவிந்தசாமி செட்டியார் வீடு மற்றும் கொல்லைக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தில் அம்பலவாணன் வீடு கொல்லைக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 ஆவணத்தில் அம்பலவாணன் வீடு கொல்லைக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்திலும் அம்பலவாணன் வீடு கொல்லைக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் ஹலிமா

பீவிக்கு விசாலாட்சி எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தில் விஸ்தீரணத்தில் தென்வடலாக 100 அடி உள்ளது என்றால் சரிதான். இதற்கு முன்புள்ள ஆவணங்களில் 100 அடி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வா.சா.ஆ.1 ஆவணப்படி என்னுடைய சந்து புழக்கம் தாவா சொத்திற்கு தென்புறம் உள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்து விபரத்தில் நான்கெல்லையில் பிரதிவாதிகளின் பெயரோ அல்லது அவர்களின் மூதாதையர்கள் பெயரோ இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு உள்ள மூல ஆவணங்களில் அனைத்திலும் நான்கெல்லைகள் ஒரே மாதிரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பு உள்ள மூல ஆவணங்களில் அனைத்திலும் நான்கெல்லைகள் ஒரே மாதிரி குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் நான் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஆவண எண் 739/1936 கிரயம் பெற்றதற்கு பின்பு பிரதிவாதிகள் மீதோ அல்லது அவர்களது முன்னோர்கள் மீதோ வாதியாலோ அல்லது அவர்களுக்கு முன்பு கிரயம் பெற்றவர்களாலோ வழக்கு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் இடையில் அம்பலவாணன் செட்டியார் வீடு உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் இடையில் அம்பலவாணன் செட்டியார் வீடு உள்ளது, அது சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் எனது தாயார் சார்பாக அ.வ.எண்–128/2016 தாக்கல் செய்யப்பட்டு அதில் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரப்பட்டுள்ளது, அதனை மறைத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. எனது வீட்டிற்கு தென்புறத்தில் ராஜமாணிக்கம் செட்டியார் நடராஜன் என்பவர் பழைய ஓட்டு வீட்டை இடித்துவிட்டு சுற்றுசுவர் வைத்து RCC

ஓட்டுவீடு கட்டியுள்ளார் என்றால் அது நீதிமன்ற உத்தரவை மீறி கட்டப்பட்டுள்ளதால் அதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. ராஜமாணிக்கம் மகன் நடராஜன் வீடுகட்டி முடித்த பிறகு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் அந்த வழக்கு அற்றுபோய் விட்டது (infructuous) என்றாலும் அதனால் நீதிமன்ற அவமதிப்பு மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றாலும் சரியல்ல. அந்த நீதிமன்ற அவமதிப்பு மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என தெரிந்தும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது இடத்திலிருந்த பழைய வீட்டை இடித்துவிட்டு புது வீடு கட்டியபிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல, அந்த வீடு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டதால் கட்டும்போதே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

7. நான் நகராட்சிக்கு செலுத்துகிற சொத்துவரியானது (வா.சா.ஆ.2) 30 அடி அகலம், 55 அடி நீளத்திற்கு தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள நான்கெல்லை சரியா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள நான்கெல்லை சரியானது என்றால் அ.வ.எண்.128/2016 ல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லையும், இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லையும் வெவ்வேறானது, தவறானது என்றால் சரியல்ல, ஒரே நான்கெல்லை தான். தாவா சொத்தின் அளவானது 30 அடி அகலம், 100 அடி நீளம் என்பது எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் 1990ம் வருடத்திலிருந்து தெரியும். எனது தாயாருக்கு 1976ம் வருடத்திலிருந்து தெரியும்.

8. எனது தாயாருக்கு 1976ம் வருடத்திலிருந்து தெரியும் என்றால் அதிலிருந்து 3 வருடத்திற்குள் இந்த வழக்கினை தாக்கல் செய்ய வேண்டும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த

வழக்கில் நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் வரைபடத்தில் (நீ.ம.சா.1 முதல் 4) கூறப்பட்டுள்ள விபரங்கள் உண்மை என்றால் சரியல்ல. நீ.ம.சா.1 முதல் 4 வரையிலான ஆவணங்களுக்கு எதிராக எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை என்றால் இல்லை, ஆனால் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

9. நீ.ம.சா.1 முதல் 4 வரையிலான ஆவணங்களில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை எனவும், வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள 30x100 அளவீடும் ஸ்தலத்தில் இல்லை என அறிக்கையில் இல்லை என தாக்கல் செய்துள்ளனர் என்றால் வா.சா.ஆ.1 படி அளக்கவில்லை. நீ.ம.சா.1 முதல் 4 வரையிலான ஆவணங்களின்படி தென் வடலாக 55 அடிக்கு பின்னர் வாதிக்கு எவ்விதமான அனுபவமும் இல்லை என்று சுற்றுசுவர் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. எனது வீட்டிற்கு தெற்கு புறத்தில் அம்பலவாணன் மகன் நடராஜன் வீடு உள்ளது, அதற்கடுத்து பிரதிவாதிகளின் வீடு உள்ளது, அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின்படியும், வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின்படியும், தாவா பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி பிராதில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் தென் வடலாக 100 அடி வாதிக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளார், அவ்வாறு குறிப்பிடப்பட்ட இடங்களில் பிரதிவாதிகளுக்கும், ராஜமாணிக்கம் மகன் நடராஜனுக்கும் கிடைக்கப்பெற்றுள்ள பத்திரப்பதிவுகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு சாட்சியம் அளிக்க வராத காரணத்தால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–14.12)**